★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூதா சர்பத்
★ மிக்ஸ் புருட் ஐஸ்கிறீம்
செந்தாமரை
(றிக்கோ)
குளிர் நடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மதிய உணவாக
குசிமிக்க நாடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள
செந்தாமரை
(றிக்கோ)
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 28 சனிக்கிழமை (11 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 195

# தொண்டா-அஷ்ரப் தீர்வுத் திட்டம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

லண்டன், ஜூன் 11

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தன்னாட்சி அதிகாரம் உடைய பிராந்திய சபைகளை அமைக்கவேண்டும் என்ற யோசனைத் திட்டத்தை இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கில் பெருமளவில் சட்டமியற்றும் அதிகாரங்களும், செயலாட்சி அதிகாரங்களும், நிர்வாக அதிகாரங்களும் கொண்ட பிராந்திய சபை ஒன்றுக்கு அரசும், விடுதலைப் புலிகளும் அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று இவர்கள் முன்வைத்துள்ள திட்டம்கூறுகின்றது.

ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிலான தன்னாட்சி தான் இப்போதைக்குஇனப் பிரச்சினைக்கு தீர்வுகண்டு அமைதிப்பாதையை நோக்கி செல்வதற்கான ஒரு வழி என்றும் —

இந்த திட்டத்துக்கு அரசும், விடுதலைப் புலிகளும் ஆக்க பூர்வமான வழி கண்டால் பேச்சு வார்த்தைக்கான பாதை திறக்கும் என்றும் — பி பி. ஸி. கருத்து தெரிவித்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் எந்த திட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பைக் கோரும்?

## பியோன் போன்று நடத்திவிட்டார்களே

### சர்வானந்தா கவலை

கொழும்பு, ஜூன் 11

ஆறு வருடங்கள் பதவியில் இருந்த ஆளுநர் ஒருவரை, அப்பதவிக்கு ஏற்றபடி மரியாதையாக நடத்தவில்லை. ஒரு பியோன் மாதிரி ஒரு கடிதத்தின் மூலம் வெளியே தள்ளி விட்டார்கள்.

இவ்வாறு முன்னாள் பிரதம நீதியரசரான திரு சுப்பையா சர்வானந்தா பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

பதவி விலகுமாறு ஜனாதிபதி கோருவதாக அவரின் செயலாளர் என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார். காரணம் கேட்டேன். காரணம் தரமுடியாது என்றார் திரு. விஜேதாஸ. அப்படியானால் ''டிஸ்மிஸ்'' செய்யுங்கள் என்றேன். ''டிஸ்மிஸ்'' செய்தால் காரணம் கொடுக்கத்தானே வேண்டும்.

ஆனால் ''டிஸ்மிஸ்'' செய்யும் கடிதத்தில் காரணம் கூறப்படவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வேறு வழி இல்லாததால் இவ்வாறு ஒரு நிர்ப்பந்தம்

கொழும்பு, ஜூன் 11

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் சிக்கலை எதிர் நோக்கும் ஸ்ரீலங்கா அரசு, அதனை நடத்தி முடிப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பை நேரடியாகக் கோரக் கூடும்.

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இவ்வாறு பேசப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்காவின் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் இந்த ஆண்டு இறுதியில் பூர்த்தியடைவதால் இவ்வாண்டுமுடிவதற்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டிய கட்டாய நிலையில் அரசாங்கம் உள்ளது.

ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சூழ்நிலையால் ஜனாதிபதித் தேர்தலை நாடு முழுவதிலும் நடத்த முடியாத இக்கட்டு ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின்படி—

அரசாங்கம் விரும்பினால் அத்தேர்தலை நாட்டில் பகுதி பகுதியாக நடத்த முடியும் ஆனால் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அத்தேர்தலை நடத்தி முடித்த பின்னரே அத்தேர்தல் தொடர்பான வாக்குகளை எண்ண முடியும்.

எனவே—

(6ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் எண்ணிக்கை உயரும்

அடுத்த வாரம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் அமைச்சரவை மாற்றத்துடன் அமைச்சர்களின் எண்ணிக்கை 86 ஆக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக எம். பிக்களாக நியமனம் பெற்றுள்ள காமினி திஸநாயக்கா, றொனி டி மெல் மற்றும் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோர் அடுத்தவாரம் அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இப்போது 83 அமைச்சர்கள் உள்ளனர்.

அமைச்சர் ஒருவருக்கும் அவருக்குரிய ஊழியர்களுக்குமாக அரசாங்கம் மாதாந்தம் 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவிட்டு வருகிறது என்று மதிப்பவமிகு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி பார்த்தால் 86 அமைச்சர்களுக்கும் அவர்களுக்குரிய ஊழியர்களுக்கும் ஆண்டொன்றுக்கு 216 கோடி ரூபா செலவிட வேண்டிய நிலை ஏற்படும் என்று மதிப்பவமிகு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-எ-6)

## பிரபாவின் கருத்தை அறிவதில் பிரேமச்சந்திரா ஆர்வம்

### அடுத்த வாரம் மீண்டும் சந்திப்பு

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது பரிமாறப்பட்ட கருத்துகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசியத்தலைவர் திரு வே. பிரபாகரனுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவர் தமக்கு அறிவித்திருப்பதாக வடமேல் மாகாண முதலமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளருமான திரு ஜி. எம். பிரேமச்சந்திரா லங்காதீப பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த வாரத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவர் தம்மைச் சந்திக்கவிருப்பதா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாண ஆளுநர் சர்வானந்தா பதவி நீக்கம்

கொழும்பு, ஜூன் 11

மேல்மாகாண ஆளுநர் திரு. சுப்பையா சர்வானந்தா நேற்று நண்பகல் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை 8 30 மணியளவில் ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸா, ஆளுநர் சர்வானந்தாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பதவி விலகும்படி கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியின் உத்தரவு இது என்றும் திரு விஜேதாஸா ஆளுநரிடம் தெரிவித்தார்.

''நான் எவ்வித தவறும் செய்யவில்லை எனவே ஆளுநர் பதவியில் இருந்து நான் விலகப்போவதில்லை. தேவையானால் நீங்கள் விலக்கலாம்'- இப்படி சர்வானந்தா ஜனாதிபதியின் செயலாளரிடம் கூறினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சின் களஞ்சியம் தீப்பிடிப்பு

கொழும்பு, ஜூன் 11

கல்விச் சேவைகள் அமைச்சின் நாரஹேன்பிட்டி களஞ்சியசாலையில் நேற்றுக்காலை தீப்பற்றிக் கொண்டது.

தீயை, தீயணைக்கும்படை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

சேத விவரங்களை மதிப்பிடும் வேலையை அமைச்சு மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

(இ-எ-6

## புதிய ஆளுநராக சுவாமிநாதன்

கொழும்பு, ஜூன் 11

மேல்மாகாணத்தின் புதிய ஆளுநராக திரு. டி. எம். சுவாமிநாதன் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் நிர்வாக அறங்காவலரான இவர், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

அரசசேவை ஆணைக்குழு, கல்விச் சேவைக்குழு, பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் இவர் பணி புரிந்துள்ளார்.

இவர் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ-3)

## முச்சந்தி முரளி



தொண்டாவும் விடுகிறதில்லை என்றுதான் நிற்கிறார் பாருங்கோ......!

## பதவி நீக்க பின்னணியில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி

### அத்தாவுட செனவிரத்தினா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 11

மேல் மாகாண ஆளுநரான சர்வானந்தாவை பதவி நீக்கம் செய்தது, முதலமைச்சர் சந்திரிகா தலைமையிலான ஆட்சியை கவிழ்க்க அரசு எடுத்துள்ள மறைமுக முயற்சியாகும்.

ஐக்கிய சோஷலிச அணி எம். பியும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் உப செயலாளருமான அத்தாவுட செனவிரத்தினா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய இது போன்ற நடவடிக்கைகளை தென் மாகாண சபையிலும் மேற்கொண்டது.

தெற்கு மக்கள் அதற்கு சரியான பாடத்தை அரசுக்கு படிப்பித்திருந்தும், ஆட்சியைப் பிடிக்கும் பேராசையால் படிப்பினையை அரசு உதறித் தள்ளி விட்டது என்றும் அவர் கூறினார். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும்பார்க்க ஆட்சியில் நீடிப்பதே அரசின் இலட்சியமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

(இ-எ-6)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 11

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

(இ-3)

### சாரைநகர் கண்ணிவெடியை அடுத்து

## தீவுப் பகுதியில் படையினர் முழு உஷார் நிலையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

காரைநகர் கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து தீவகப் பகுதிகளில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்ச உணர்வு அங்குள்ள படையினருக்கு ஏற்பட்டுள்ளது

காரைநகரில் கண்ணிவெடியில் கடற்படை தண்ணீர் பவுஸர் சிக்கி சிதறிய சம்பவத்தை அடுத்து தீவகத்தில் சகல படை நிலைகளும் முழு எச்சரிக்கையாக இருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

காரைநகர் எளாறா கடற்படைத் தளத்துக்கு அண்மையில் இக்கண்ணி வெடித்ததாகக் கூறும் பாதுகாப்பு அமைச்சு, எளாறா கடற்படையின் தலைமையகம் என்றும் கூறியுள்ளது.

கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து கடற்புலிகள் தாக்குதல் நடத்துவர் என்ற அச்சம் காரணமாக காரைநகர், எழுவைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை பகுதி படையினர் முழு எச்சரிக்கையாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## எரிபொருள் விற்பனை முகவர்கள் ம.எண்ணெய் எடுத்துவர அனுமதி

யாழ். மாவட்டத்தில் உள்ள உத்தரவுபெற்ற எரிபொருள் விற்பனை முகவர்களும் மாதாந்தம் மண்எண்ணெய் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு இணைப்புக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ் மாவட்ட மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கவும் —

விவசாயத் தேவைகளுக்கு வழங்கவும் — மாதாந்தம் 4 ஆயிரத்து 500 பரல் மண்எண்ணெயை கப்பல் மூலம் எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக் குழு யாழ் அரச அதிபருக்கு அனுமதி வழங்கி இருந்தது.

இந்த மாதம் முதல் இதன் அளவு 7 ஆயிரத்து 250 பரல்களாக அதிகரிக்கப் பட்டுள்ளது

இதற்கு புறம்பாகவே யாழ். மாவட்டத்தில் உள்ள உத்தரவு பெற்ற எரிபொருள் முகவர்களும் குறிப்பிட்ட தொகை மண்எண்ணெயை மாதாந்தம் எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

உத்தரவு பெற்ற எரிபொருள் விற்பனை முகவர்களுக்கான மண்எண்ணெய்யும் 'மாஹோ' கப்பல் மூலமே எடுத்து வரப்படும்.

## ஜப்பானில் பேச புலிகளுக்கும் அரசுக்கும் அழைப்பு

மணிலா, ஜூன் 11

''இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் ஜப்பானில் கூடி சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட முன்வர வேண்டும்''

கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரக பொறுப்பதிகாரி திரு. கோஸிம் உட்டோ மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சகத்துக்கு அவர் இந்த அழைப்பை அனுப்பினார்.

இலங்கை அரசின் பதிலை தாம் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

ஜப்பா… [illegible] …வுக்கு அனுப்பப்பட்… காரி ஒருவர் … யில் தெரிவித்தார்.

பொதுமக்களின் பார்வைக்குப் படாத இடத்தில் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் கூடிப் பேசினால் அது ஆக்கபூர்வமாக இருக்கும் என்றும் அந்த ஜப்பானிய தூதரக … குறிப்பிட்டார்.

இலங்கைக்கு கூடுதல் உதவி வழங்கும் முக்கிய நாடு… ஜப்பானும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று நித்தி நினைவு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

நாட்டுப்பற்றாளர் அமரர் து. நித்தியானந்தனின் (நித்தி யின்) நினைவஞ்சலிக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலை ஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழக் கலைஞர்கள், நண் பர்கள் இணைந்து முன்னோ டிக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

பிரபல நாதஸ்வர தவில் வித்து வான்கள் நாதாஞ்சலி செலுத் துவர்.

திரு. பொன். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. சோ. பத்மநாதன் கவிதாஞ்சலி வழங்குவார்.

ஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர பர மாச்சாரிய சுவாமிகள், வண. பிதா. பிரான்ஸிஸ் ஜோசெப் அடிகள், பேராசிரியர்கள் கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், திருவாளர்கள் மு. கண்ணன், எஸ். பாலசிங்கம், சு. கண பதிப்பிள்ளை, இ. ஜெயராஜ், கலாநிதி சபா ஜெயராசா, புதுவை இரத்தினதுரை, ந. வீரமணி ஐயர், திருவாளர்கள் வி. கே. பஞ்சமூர்த்தி, க. சோமசுந்தரம், ஜவான் ஆகி யோர் அஞ்சலி உரையாற்று வர்.

இறுதியில் சாந்தன் குழுவி னரின் "நித்தி நினைவுப் பாடல்கள்" இடம்பெறும். (ஓ)

## திரிபோஷா தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 11

கொழும்பில் இருந்து திரி போஷா மா வந்து சேராத தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரி களில் திரிபோஷா மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-17)

---

தொழிநுட்பக் கல்லூரி – யாழ்ப்பாணம்

## ஆங்கில தேசிய தராதரப் பத்திரம் சான்றிதழ்கள்

பரீட்சை ஆணையாளர் 1983 தொடக்கம் 1988 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை பரீட்சைகளில் சித்திபெற்றோரின் மூலச்சான்றிதழ்களை அனுப்பி யுள்ளார்.

சித்தியடைந்த பரீட்சார்த்திகள் அலுவலக நேரங் களில் நேர்முகமாக வந்து தமது அடையாளங்களை நிரு பித்து சான்றிதழ்களை பதிவாளரிடம் பெற்றுக் கொள் ளவும்.

தொழிநுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்,
9. 06. 94.

க. ஜெயரத்தினம்
அதிபர்
(சி/8436)

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் வைகாசி மாதம் 29ஆம் திகதி [12-06-94] ஞாயிற்றுக் கிழமை காலை 7-00 மணி முதல் 11-00 மணி வரை வரும்

★ சுப வேளையில் ★

| எமது புதல்வன்<br>திருநிறை செல்வன்<br>**மனோகரவாசன்**<br>(இத்தாவி) | ★★★★★ | எமது புதல்வி<br>திருநிறை செல்வி<br>**சீதாதேவி** |
|---|---|---|

ஆகியோருக்கு திருநெல்வேலி, அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் மங்கல நாண்பூட்டு வைபவம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளதால், தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியும் அத் துடன் மணமக்கள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரங்களிலும்

★ கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம் ★

மணமகன் இல்லத்தில்: மணவாளக் கோலம் காலை 7மணி முதல் 9மணி வரை

மணமகள் இல்லத்தில்: குதசாந்தி வைபவம்மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை

★ தங்கள் நல்வரவை நாடும் ★

வ. சண்முகலிங்கம் ஆச்சாரியார்
தம்பதிகள்,
அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

க. செல்லத்துரை ஆச்சாரியார்
தம்பதிகள்,
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி, வடக்கு,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு) [31353]

---

தமிழீழக் கலைஞர்கள், நண்பர்கள் இணைந்து நடத்தும்
நாட்டுப் பற்றாளர்

## அமரர் து. நித்தியானந்தன் (நித்தி)

# நினைவஞ்சலிக் கூட்டம்

**இடம்:** இளங்கலைஞர் மன்ற மண்டபம், நல்லூர்
**காலம்:** 11 06 1994 சனிக்கிழமை பி. ப. 4.00மணி
**தலைவர்:** திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
(தலைவர், இளங்கலைஞர் மன்றம்)

நாதாஞ்சலி

நாதஸ்வரம்:
என். கே. பத்மநாதன்
கே. ஆர். சுந்தரமூர்த்தி
வி. கே. கானமூர்த்தி
வி. கே. பஞ்சமூர்த்தி
ஆர். கேதீஸ்வரன்

தவில்
கே. நித்தியானந்தன்
பி. கணேசன்
என். ஆர். எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுதாகரன்
எஸ். ராமதாஸ்

நினைவுச் சுடரேற்றல்
திரு. பொ. புலவர் அவர்கள் (புலவர் வீடியோ)
திரு. இ. மனோகரன் அவர்கள் (மனோ கலையிற்)

மௌனாஞ்சலி

தலைமையுரை

கவிதாஞ்சலி கவிஞர், சோ. பத்மநாதன் அவர்கள்

அஞ்சலி உரைகள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி
வண. பிதா. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
திரு. மு. கண்ணன் அவர்கள் (இசையமைப்பாளர்)
திரு. எஸ். பாலசிங்கம் அவர்கள் [செயலாளர், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்]
திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்கள் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், சங்கீதம்)
திரு. இ. ஜெயராஜ் அவர்கள் [அமைப்பாளர், கம்பன் கழகம்)
பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் (தலைவர், நுண்கலைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் (தலைவர், இராமநாதன் நுண்கலைக் கல்லூரி]
திரு. வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள் [நாதஸ்வர வித்துவான்]
திரு. க. சோமசுந்தரம் அவர்கள் [மகாராணி]
நா. வீரமணி ஐயர் அவர்கள் [இயலிசைவாரிதி]
திரு. ஜவான் அவர்கள் [பொறுப்பாளர், நிதர்சனம்]
திரு புதுவை இரத்தினதுரை அவர்கள் [பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்]

கீதாஞ்சலி
மெல்லிசைப் பாடகர் எஸ். ஜீ. சாந்தன் குழுவினர் வழங்கும்
**'நித்தி நினைவுப் பாடல்கள்'**

அனைவரும் இணைந்து நித்தி அண்ணரின் நினைவில் நனைவோம்
— தமிழீழக் கலைஞர்கள், நண்பர்கள்.

விளம்பர அனுசரணை:
புலவர் வீடியோ,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

---

## அறிவித்தல்

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்ட பத்தில், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்களால் 12-06-1994 இல் நடத் தப்படுகின்ற நிர்வாக சபை தெரிவுக் கூட்டத்துக்கு, ஆலய தர்மகர்த்தாக்களிடமோ அல்லது எங்களிடமோ எந்தவித அனுமதியும் பெறப்படவில்லை என்பதை அனைத்து அடியார்களுக்கும் உபயகாரர்களுக்கும் அறி யத்தருகிறோம்.

— இணை முகாமையாளர்கள்

மூத்தநயினார் ஆலயம்,
ஆனைக்கோட்டை. (31360)

---

## பதவி வெற்றிடம்

புங்குடுதீவு-நயினா தீவு பல. நோ. கூ. சங்கம், வரையறுக்கப்பட்டது

### பொது முகாமையாளர் தரம் III

1. கல்வித்தகைமைகள்:

[அ] கூட்டுறவு வேலையாளரின் 8ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைத்துவ/மேற்பார்வையா ளர் பதவியில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் 9ஆவது சம்பளத்திட்டப் பதவியில் 6வருடங் களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டதாரி அல்லது சம மதிப்புள்ள தராதரமும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்ட பதவி யில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

[இ] கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி (உயர் தரம்) தராதரப் பத்திரம்/க. பொ. த (உயர் தரம்) தராதரப்பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 4வருடங்களுக்கு குறை யாத அனுபவம்.

2. சம்பளத்திட்டம்: $\frac{1105 - 2170}{60\times4 - 75\times11}$ இதரபடிகளும்

3. வயதெல்லை: 23 — 50

4. பிணை ரொக்கம்: 3000/-
உறுதிப்பிணை: 5000/-

5. விண்ணப்ப முடிவு திகதி: 30-06-1994

விண்ணப்பங்கள்:

தலைவர்,
புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம்
இல. 201/1, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்.
புங்குடுதீவு-நயினாதீவு, பல. நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்.
(சி-8440)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



வேலணை மேற்கு 8ஆம் வட்டாரம்
காலஞ்சென்ற
கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதியின்
சிரேஷ்ட புத்திரன்

### அமரர் க. சொர்ணலிங்கம்

தோற்றம்: 25 — 08 — 1937
மறைவு: 12 — 05 — 1994

நெஞ்சைப் பிளக்கும் நின் பிரிவால்
நித்தம் நித்தம் கலங்குகிறோம்!
வஞ்சம் ஏதும் அறியாத மாணிக்கமான எம் அரசே!
தஞ்சமின்றித் தவிக்கின்றோம் தருவாய் வந்து
நிம்மதியை!

●

அன்புகாட்டி அரவணைத்துப் பாசமதைக்
கொட்டியவரே
எங்கு சென்றீர்? சொர்ணலிங்க ஏந்தலே!
உயிர்க்குயிராய் ஒன்றி விட்டாய் எம்முடலில்
தவிக்கின்றோம் ஐயா! இரக்கத்தின் இருப்பிடமே!

●

தினமுமிரு கண்களிலே குளமாய் வழியுதையா!
அணை போட ஆளில்லை! அமைதி பெறவழியில்லை!
சரியான வழிகாட்ட நீரில்லை! நாமிங்கு
அலையுண்டு சிதறுண்டு கொலையுண்டு மடிகிறோம்
சொர்ணலிங்க ஏந்தலே! சொல்லுங்கள் வழி எமக்கு!

மனைவி, மக்கள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

8ஆம் வட்டை,
வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
[31354]

---

தாவடி மத்திய சனசமூக நிலையம்
நடத்தும்

## மின் ஒளியில் மிளிரும் V/BALL இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

இடம்: நிலைய மைதானம்
காலம்: இன்று 11 - 06 - 1994 சனி
இரவு 6 மணி

பிரதம விருந்தினர்:
திரு. சுந்தரம் டிவகலாலா
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

பங்குபற்றும் அணிகள்:

6 பேர் கொண்ட போட்டி – 1 ஆம் இடம்
வள்ளுவன் வி. க. (வண்ணார்பண்ணை) எதிர் அறிவொளி ஐ. க. (ஆனைக்கோட்டை)

4 பேர் கொண்ட போட்டி – 1 ஆம் இடம்
வள்ளுவன் வி. க. (வண்ணார்பண்ணை) எதிர் கலைமதி வி. க. (புத்தூர்)

3 ஆம் இடத்திற்கான போட்டி:
6 பேர் கொண்டது
கலைமதி வி. க (புத்தூர்) எதிர் யூனியன் வி. க. (ஆனைக்கோட்டை)

4 பேர் கொண்டது
யூனியன் வி. க. [ஆனைக்கோட்டை] எதிர் அறிவொளி ஐ. க [ஆனைக்கோட்டை]

செற் அப் முறையிலான காட்சிப் போட்டி யும் இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
— நிலையத்தினர்

(சி-8278)

---

## புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

கீழே குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நிபந்தனைகளும் தகைமைகளும்:
(அ) சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன் உரிமை வழங்கப்படும்.

## பதவி வெற்றிடங்கள்

(அ) பொது இலிகிதர் தரம் III
கல்வித் தகைமைகள்:
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
வயது: 18 — 40
சம்பளத் திட்டம்: $\frac{730 - 1055}{20X10 - 25X5}$ இதர படிகளும்
பிணைரொக்கம்: 20.0/-

(ஆ) கிளை முகாமையாளர் தரம் III
(புடவை விற்பனையில் அனுபவமுள்ளோர்)
கல்வித் தகைமைகள்:
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
வயது: 18 — 40
சம்பளத் திட்டம்: $\frac{730 - 1055}{20X15 - 25X5}$ இதர படிகளும்
பிணைரொக்கம்: 2000/-
உறுதிப்பிணை: 3000/-

(இ) லொறி கிளீனர்
கல்வித் தகைமைகள்:
ஐந்தாம் வகுப்பு சித்தி
வயது: 18 — 40
சம்பளத் திட்டம்: $\frac{700 - 950}{15X10 - 20X5}$ இதர படிகளும்
பிணைரொக்கம்: 1000/-

(ஈ) இரவுக் காவலாளி
(தற்காலிகம் — ஒருவருடம்)
கல்வித் தகைமைகள்:
ஐந்தாம் வகுப்புச் சித்தி
வயது: 18 — 40
சம்பளத் திட்டம்: $\frac{700 - 950}{15X10 - 20X5}$ இதர படிகளும்
பிணைரொக்கம்: 2000/-

விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 27 - 06 - 1994 க்கு முன் நேரில் அல் லது பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்களை சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

பதில் பொது முகாமையாளர்,
புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்.

இல. 201/1,
3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
[சி-8441]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு இறைச்சிக் கடைகளை சுத்தமாக வைத்திருக்க வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 11

முல்லை மாவட்டத்தில் உள்ள இறைச்சிக் கடைகளில் சுத்தம் பேணுவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகின்றது.

குறிப்பாகசுற்றாடல்சேணப் பட வேண்டும் என்றும் கடையில்பாவிக்கப்படும் உபகரணங்கள், ஆயுதங்கள் துப்புரவாக இருக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இறைச்சித் துண்டங்கள் வைக்கும் மேசை அல்லது வலை துப்புரவாக இருக்க வேண்டும் என்றும் பொலித்தீன் அல்லது மெழுகுச் சீலையால் போர்க்கப்பட்டு அதன்மேல் தான் விற்பனைக்கான இறைச்சி வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இறைச்சி விற்பவரின் வியர்வை இறைச்சியுடன் சேர்வதைத் தடுப்பதற்கு கட்டாயம் மேலங்கி அணிய வேண்டும் எனவும்வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவின் ஆலோசனையுடன் எடுக்கப்பட்டு வருவதுடன் இதற்கான சுற்றுநிருபம் ஒன்று தயாரிக்கப்பட்டு சகல இறைச்சிக்கடை உரிமையாளருக்கும் வழங்கப்பட்டுள்ளது. (இ)

## சுகாதார வார கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

நல்லூர்பொதுச் சுகாதாரப் பிரிவின் தேசிய சுகாதார வாரக் கொண்டாட்ட இறுதி நாள் விழா இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மாநகர ஆணையாளர் திரு. வே. (பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாட்டு, பேச்சு மற்றும் நாடகப் போட்டிகள் மற்றும் சான்றிதழ் வழங்கல் ஆகியனவும் இடம்பெறும். [க-17]

## பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு பாவிக்கப்படும் விறிச்சினின் மருந்தை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு வடபிராந்திய சுகாதார திணைக்களத்துக்கு அனுமதி வழங்க பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு மறுத்துவிட்டது.

தற்போது பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்கள் அவைகள் அடைக்கப்பட்டுள்ள வண்டிலுடன் கடலுக்குள் அமிழ்த்தியே கொல்லப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-162)

## வரையறுக்கப்பட்ட கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

மூளாய்

பதிவு இல. 83/4 - 04 - 1936

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03ஆம் திகதி (03 - 07 - 94) ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

#### நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. கூட்ட அறிவித்தல் வாசித்தல்
3. தலைவர் உரை
4. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
5. கணக்காய்வு அறிக்கை (1991-92 ஆம், 1992 - 93ஆம்)
6. மொத்தக்கடன் எல்லை ரூபா 500,000/- அங்கீகாரம்
7. வடஇலங்கை மருத்துவக் கல்லூரியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம்
8. பிரேரணைகள்
9. புதிய அங்கத்தவர்கள் அங்கீகாரம்
10. பணிப்பாளர் சபை வெற்றிடங்கள் தெரிவு: சித்தங்கேணி, வட்டுக்கோட்டை கிழக்கு, மேற்கு, அராலி (2), சங்கானை மேற்கு, பண்ணாகம் (2), தொல்புரம், மூளாய், பொன்னாலை (1), சுழிபுரம், நெல்லியான் (2), காரைநகர் (2), பண்டத்தரிப்பு, சங்கானை கிழக்கு, மாதகல் (1)
11. நன்றியுரை
12. இறைவணக்கம்

குறிப்பு:

1. 26-06-94இற்கு முன்பு கிடைக்கும் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.
2. கணக்காய்வு அறிக்கைகளை (91/92 — 92/93) சங்க அலுவலகத்தில் அங்கத்தவர் பார்வையிடலாம்.
3. அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு சமுகமளிக்கையில் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு ஏதாவதொரு ஆவணத்தை தம்முடன் எடுத்து வரும்படி கோரப்படுகின்றனர்.

வ. அ. வரதராசா, தலைவர்.
நா. வேலுப்பிள்ளை, செயலாளர்.
12-06-94.
(சி-8437)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் வைகாசித் திங்கள் 30ஆம் நாள் (13-06-94) திங்கட்கிழமை முற்பகல் 10-48 முதல் 01-12 வரையுள்ள சிங்கலக்கின ★ சுபமுகூர்த்த வேளையில் ★

திருவளர் செல்வன் **ஜெயச்சந்திரகாந்தன்** (காந்தன்) அவர்களுக்கும்

திருவளர் செல்வி **தயாழினி** (தயா) அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு ஆடியபாத வீதி கல்வியங்காடு ஸ்ரீகலட்டி சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு ★ அன்புடன் அழைக்கின்றோம். ★

✶ வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் (15 - 06 - 1994) புதன் மாலை 4மணிக்கு நடைபெறும்.

திரு. க. இராசலிங்கம் குடும்பத்தினர்,
இல. 16, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு. க. கனகசிங்கம் குடும்பத்தினர்,
ஞானபாஸ்கர சமிக வீதி,
கல்வியங்காடு.

(சி-8376)

# முல்லைத்தீவில் இரவு பகலாக 3 நாட்கள் விமானத் தாக்கு

## பலத்த ஷெல் வீச்சும் தொடர்ந்தது

கொழும்பு, ஜூன் 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் முள்ளியவளை ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் கடந்த வாரம் தொடர்ந்து மூன்று தினங்களாக விமானத் தாக்குதல்கள் இரவும் பகலுமாக நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளை நோக்கி முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து பலத்த ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன என்றும் அங்கு இருந்து வந்த செய்திகள் தெரிவித்தன.

இதன் காரணமாக முள்ளியவளை, முள்ளிவாய்க்கால் கிராமங்களின் அருகே அமைந்துள்ள அரச அலுவலகங்களில் பணிபுரிந்து வந்த ஊழியர்கள், அலுவலகங்களை விட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டது.

அச்சம் காரணமாக இக் கிராமங்களின் எல்லைப்புறங்களில் வாழ்ந்து வந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர வேண்டியதாயிற்று என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ—எ)

## பணத்தைச் செலவிட பிரதேச செயலகங்களுக்கு அரசு கட்டுப்பாடு விதிப்பு

தென்மராட்சி, ஜூன் 11

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு இந்த வருடத்தில் ஒதுக்கப்பட்ட மூலதன செலவீனத் தொகையில் 20 சதவீதமான நிதியை செலவு செய்ய வேண்டாம் என்று சகல பிரதேச செயலகங்களும் திணைக்களங்களும் பணிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான பணிப்புரையை வடக்கு - கிழக்கு மாகாண நிதித் துறையின் பிரதிப் பிரதம செயலாளர் விடுத்திருக்கிறார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு இணங்கவே இப்பணிப்புரை விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1995ஆம் ஆண்டில் புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்படக்கூடாது; புதிய நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் —

மூலதனச் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் 20 சதவீதத்தை செலவு செய்யக் கூடாது என்றும் அமைச்சரவைத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் மூலதன செலவீனங்களுக்கென பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (எ-117)

## சங்கீத, நடன பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

அரசாங்க பாடசாலைகளுக்கு சிறைத்தேய சங்கீத/நடன ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடத்தப்பட இருக்கிறது.

இப்போட்டிப் பரீட்சையில், உளச்சார்பு, பொது அறிவு பாட அறிவை மதிப்பீடு செய்தல் போன்ற பாடத்திட்டங்கள் இடம்பெறும் என்று கல்விச் சேவைச் சபைச் செயலாளர் ஏ. எல். வீரரத்தினா சகல பரீட்சார்த்திகளுக்கும் அறிவித்திருக்கிறார். (எ-8)

## 50 ஆயிரம் பனை விதைகள் இவ்வாண்டு நடுகை

யாழ்ப்பாணம், ஜூன் 11

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு யாழ் கல்லுண்டாய் வெளிப் பிரதேசத்தில் 50 ஆயிரம் பனை விதைகள் நடுகை செய்யப்பட உள்ளன.

வலிகாமம் கொத்தணியில் அங்கத்துவ சங்கங்களான சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, சுன்னாகம், கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (எ)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு இரட்டைசூட்டடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நிவகக் கோட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து ஸ்ரீயன் குடியிருப்பில் வாழும் குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் சிப்பகுதியினரால் கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புகள் கட்டி வழங்கப்பட்டன.

கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் முதல் நடவடிக்கையாக இவர்களுக்கு இவை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. (எ)

## மட்டக்களப்பில் சின்ன வெங்காயம் கிலோ 120 ரூபா

கொழும்பு, ஜூன் 11

கிழக்கு மாகாணத்தில் சின்ன வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாநகர சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் நூறு ரூபா முதல் 120 ரூபா வரை விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விதை வெங்காயத்தை சீராக விநியோகிக்காததால், கடந்த போகத்தில் பல விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபடவில்லை என்றும் —

அத்துடன் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிர்களும் பெருவெள்ளத்தில் அழிந்து விட்டன என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## சிறிய குடும்பங்களுக்கு தொழில் ஊக்குவிப்பு கடன்

அச்சுவேலி, ஜூன் 11

புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் குடியிருக்கும் வறிய குடும்பங்களின் "தொழில் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு தொழில் ஊக்குவிப்பு கடனுதவி" வழங்கப்பட்டுள்ளது.

கிராமியப் பாசறை நிகழ்வின் வேலைத்திட்டமாக வழங்கப்பட்ட ஊக்குவிப்பு கடன் தொகை வட்டி இல்லாமல் 24 தடவைகளில் திருப்பிச்செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழில் ஊக்குவிப்பு கடன் உதவித் திட்டத்தின் மூலம் பல குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன. (இ-11)

## யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச மருத்துவ மனைகளுக்கு பற்சிகிச்சை உபகரணங்கள்

### எடுத்து வருவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் பற்சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களும் மருந்துவகைகளும் 1992 ஆம் ஆண்டுக்குப்பின்னர் கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பு சென்ற வடபிராந்திய சுகாதாரத் திணைக்கள பல்வைத்திய அதிகாரிடாக்டர் (செல்வி) உ. சிவபாதசுந்தரம் பல்வைத்தியசேவைகள் பணிப்பாளர் திருமதி அபயரட்னாவைச் சந்தித்து இது பற்றி முறையிட்டார்.

இதனையடுத்து பற்சிகிச்சை உபகரணங்களையும் மருந்து வகைகளையும் யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு அனுமதி கோரி பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவிற்குபல்வைத்திய வேலைகள் பணிப்பாளர் கடிதம் அனுப்பியுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

## பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் தேர்தல் விஞ்ஞாபனம் ஜூலையில்வெளியிடப்படும்

கொழும்பு, ஜூன் 11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

கேகாலை மாவட்ட எம்.பியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உபசெயலாளருமான அத்தாவுட செனவிரத்னா இத்தகவலை வெளியிட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி ஏற்பட்டால் அதன் நடவடிக்கைகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்ற விவரம் இவ்விஞ்ஞாபனத்தில் இருக்கும் என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனங்களை தேசிய மயப்படுத்துவோம்

### சிங்கள பத்திரிகைக்கு சிறிமாபேட்டி

கொழும்பு, ஜூன் 11

மீண்டும் பதவிக்கு வந்தால் தனியார் மயப்படுத்தப்பட்ட அரச கூட்டுத்தாபனங்களை எல்லாம் தேசிய மயப்படுத்தப் போவதாக சுதந்திரக்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

மக்கள் தங்கள் வியர்வையினால் கட்டி எழுப்பும் கூட்டுத்தாபனங்களை மக்களிடமே மீண்டும் ஒப்படைப்போம் என்று அவர் திவயின பத்திரிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

மக்களைப் பட்டினி போடாத பொருளாதாரக் கொள்கையைத்தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசு கடைப்பிடிக்கும்என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

### பங்குச் சந்தை நிச்சயமற்ற நிலை

கொழும்பு, ஜூன் 11

நிச்சயமற்ற அரசியல் நிலைவரம் காரணமாக கொழும்புப் பங்குச் சந்தையிலும் மேலும் வீழ்ச்சி ஏற்படும் அறிகுறிகள் [illegible]

## விதை உருளைக்கிழங்கு வழங்க நடவடிக்கை

1994/95 கால போகத்தில் உருளைக்கிழங்கு பயிர் செய்கையில் ஈடுபட இருக்கும் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பப் படிவங்களை பசுமை விவசாய நிலையங்கள், சம்பந்தப்பட்ட தொடர்பாளர் அலுவலங்கள் விவசாய போதனாசிரியர், விவசாய சேவை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம், விண்ணப்பங்களை விண்ணப்பதாரி நேரடியாக தமது பகுதி பசுமை சேவை நிலையங்களில் ஒப்படைக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக்குறிப்பொன்றின் மூலம் அறிவித்துள்ளது. (எ)

## சி ஐ. ஏ ஆதரவு பெற்ற பத்திரிகையாளர் சிறிமா- சந்திரிகாவை பிரித்து விட முயற்சியாம்

கொழும்பு, ஜூன் 11

தமக்கும் சந்திரிகாவுக்கும் இடையே பிளவை ஏற்படுத்த அமெரிக்க சி. ஐ. ஏ உளவு நிறுவனத்தின் ஆதரவு பெற்ற பத்திரிகையாளர்கள் சிலர் முயற்சித்து வருவதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டினார்.

"எனக்கு வயது போய் விட்டது என்றும் சந்திரிகா தான் ஜனாதிபதி வேட்பாளராக வரவேண்டும் என்றும் இப் பத்திரிகையாளர்கள் குரல் எழுப்புகின்றனர்.

எனது தலைமை தேவையா, சந்திரிகாவின் தலைமை தேவையா என்பது பற்றி இவர்களுக்கு கவலையில்லை. அவர்களின் கவலை எல்லாம் ஏகாதிபத்திய ஐ. தே. க. அரசு மீண்டும் நாட்டில் ஏற்படவேண்டும் என்பது தான்."

"இப் பத்திரிகையாளர்கள் எல்லாரும் என்னுடன் மனித்தியாலக் கணக்கில் உரையாடியவர்கள் தான். பின்னர் அவர்கள் சந்திரிகாவிடம் நெருங்கிச் சென்றனர்."

பத்திரிகை நிறுவனத்தில் 6 அல்லது 7 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களிலும் பார்க்க அரசியலில் 30 முதல் 40 வருடங்கள் ஈடுபட்ட ஒருவரால் மக்களின் நாடியை நன்றாக உணர முடியும். இப் பத்திரிகையாளர்களிலும் பார்க்க சந்திரிகா அதிகமாக படித்துள்ளார்" என்றும் அவர் சிங்கள வாரப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (ஒ-எ)

## வடக்கு கிழக்கு இணைப்பு பெரும் ஆபத்தைஏற்படுத்தும்

### அமைச்சர் தயாரத்ன கூறுகிறார்

கொழும்பு ஜூன் 11

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒருபோதும் இணைந்திருத்தல் கூடாது அப்படி இணைந்தால் அது கிழக்கில் வாழும் முஸ்லிம் சிங்கள மக்களுக்கு பெரும் ஆபத்தையே ஏற்படுத்தும்.

புனர்வாழ்வு' புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்ன முன்னொரு வாறு தெரிவித்தார்:

திருக்கோவிலில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார் கிழக்கு மாகாணம் தனித்துச் செயற்படும் போது தான் இங்கு வாழும் தமிழர், முஸ்லிம் மற்றும் சிங்களவர்களின் நலன்கள் ஒழுங்காகப் பேணப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## எதிர்பார்த்த விளைச்சல் கிடையாமல் போனது ஏன்?

### உதவி விவசாயப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

1993 - 94 காலபோகத்தில் கூடிய மழைவீச்சி பரவலாக கிடைத்த காரணத்தினால் நெற்பயிர் நல்ல நிலையில் இருந்தும் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியாது போயிற்றென்றுயாழ்மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. சிவகோசநாதன் தெரிவித்திருக்கிறார்.

எனினும் முன்னைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு விளைச்சல் சராசரி விளைவு ஏக்கருக்கு 40புசல் ஆக அதிகரித்ததை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

களைநாசினி மற்றும்பசளை தட்டுப்பாடு மழை வெள்ளம் நின்றதனால் பசளையை உரிய நேரத்தில் பாவிக்க முடியாமற் போனமை, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி, வடமராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரிவுகளில் கடுதலாக இலைச்சுருள் நோய்த் தாக்கம், அறுவடைப்பருவத்தில் மழை பெய்தமை ஆகியன காரணமாகவே எதிர்பார்த்த விளைச்சலைப் பெற முடியாமற் போய் விட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். (எ-143)

## அனுமதி வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன் 11

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு கொழும்பில் இருந்து நீர்இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள் என்பனவற்றை எடுத்துவருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பொருள்களைக் கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு கொழும்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-17)

## சொத்தி உபாலிக்கு விடுதலை இல்லை!

கொழும்பு, ஜூன் 11

சொத்தி உபாலி விடுதலை செய்யப்படமாட்டார்.

இப்படி பொலீஸார் தெரிவித்தனர்

சொத்தி உபாலிக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன அவை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

சொத்தி உபாலிக்கு இன்னும் செல்வாக்கு மிக்க சிலர் ஆதரவளித்து வருகின்றனர் — என்றும் பொலீஸார் தெரிவித்தனர் (எ)

## நில அளவை கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நில அளவையும் படம் வரைதலையும் எனும் அடிப்படைக் கற்கைநெறி ஒன்று எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது

வார இறுதி நாட்களில் தொடர்ந்து நான்கு மாதங்கள் இடம்பெறவுள்ள இக் கற்கைநெறியில் யாழ். நில [illegible] புகுமுக அங்கத்தவர்களையும் மேற்படி கற்கைநெறியைப் பயில [illegible] டோரையும் இம்மாதம் 15 ஆம் திகதிக்கிடையில் புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கும்படி இணைப்பாளர் கோரியுள்ளார். (எ)

## கொழும்பிலிருந்து 25 ஆயிரம் வாளிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

கொழும்பில் இருந்து 25 ஆயிரம் வாளிகளை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வாளிகளை வட பகுதிக்கு கப்பல் மூலம் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு மேற்படி சமாசத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது. (இ-17)

## 300 மாணவருக்கு ஜீவகாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வலி. மேற்குப் பிரதேச செயலகம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இன்று 11 ஆம் திகதி நடத்தும் போஷாக்குக் கண்காட்சியில் வலி. மேற்கைச் சேர்ந்த 300க்கு அதிகமான போஷாக்குக் குறைந்த முற்பாடசாலை (நேர்சரி) மாணவர்களுக்கு பிரதேச செயலகத்தால் ஜீவகாரம் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன பால் ஆடு 2 போத்தல் பால் பெறக்கூடிய இரு குட்டிகளுடனும், ஒரு வயதுடைய ஜமுனா பாறி மறி ஆடும் விற்பனைக்குண்டு. க. அன்ரன் இல. 155, நாலாம் குறுக்குத் தெரு (காவல்துறைக்கு அருகில்), யாழ்ப்பாணம். (31351)

3½ மாதம் நிரம்பிய Golden Comet சிவப்பு பேட்டுக் கோழிகள் 50 விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31342)

அடை வைக்கக் கூடிய நல்ல இன கோழி முட்டைகள், ஆடம், வான் கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31341)

Broiler இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். விலை கிலோ 150/- நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31340)

ஓர் ஆண்டு பூர்த்தியாகிய பொமனேரியன் ஆண் நாய்க் குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. நேரில் வரவும். சங்கரப்பிள்ளை, இல. 209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (31338)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆஷா கோழிப் பண்ணை, 1ஆம் கட்டை, பருத்தித்துறை. (31349)

## தவறவிடப்பட்டது

7-6-94 செவ்வாய்க்கிழமை கைதடிக்கும் சாவகச்சேரிக்குமிடையான பிரதான வீதியில் கடவுச்சீட்டு ஒன்று அடையாள அட்டை (642912348) சேமிப்பு வைப்பு புத்தகம் என்பன தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர் சிவாஜி கல்வி நிறுவனம், சாவகச்சேரி/விக்னா கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் தரப்படும். (சி-8278)

## சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர, கல்வி, விவாகம், தொழில் தடைகள் நீங்க சாந்தி பரிகாரங்கள் கூறப்படும் சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ் உபாசகர், ஸ்ரீமாலை சோதிட நிலையம், இல. 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. [31348]

## மனைப்பொருளியல்

ஆண்டு-7 தொடக்கம் 10 வரை பாடத்திட்டத்துக்கு அமைந்தது. ஆக்கம்: ஆர். ரூப் விலை 85/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் பொத்தக நிலையம், யாழ்ப்பாணம், (சி-8270)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஒக்ஸி போட் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக்கழகஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8438)

## ஜோதிட விஞ்ஞானம்

வியாழன் 10 பாகையில் ராகுவுடன் நிலைக்கை (குருச்சண்டாள நியோகம்) அரசாங்கத்துள் பிளவுகளையும், சொத்தவிப்புகளையும் ஜூலை முதல் உண்டாக்கும். இறுதியும் யுத்தமே. சத்யாவின் ராகு கேது மாற்றம் விற்பனையாகின்றது: மக்கியல், பாலாஜி புத்தகசாலையில், யாழ்ப்பாணம். [7230]

## கீரை வகைகள்

கோடை காலத்தில் உண்ண வேண்டிய மணத்தக்காளிக் கீரை, பசளிக்கீரை, கரிசலாங்கண்ணிக்கீரை, புதினாக்கீரை, பொன்னாங்காணி, அகத்திக் கீரை என்பன வகைக்கு கன்று ஒன்று ரூபா 10/- வீதம் எம்மிடம் விற்பனைக்குள்ளன. "மிக்கவழி" (சி-8277)

## மணமகன் தேவை

32 வயது நிரம்பிய, அச்சுவினி, செவ்வாய் 8 இராகு பாவம் 60, அழகிய A/L படித்த, நற்குணமுள்ள பெண்ணுக்கு, செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனைத் தேடுகிறார்கள். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 657, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31317)

இந்து, 29 வயது, செவ்வாய்க்குற்றமற்ற, திருவோண நட்சத்திரப் பெண்ணுக்கு ஆசிரியர், வங்கி, கணக்காளர், தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. குறிப்புடன் தொடர்பு: திருமணச் சேவை, 75, யாழ். வீதி, சாவகச்சேரி. (7440)

## தேவை

புடைவை வியாபாரம் பில் போட்டு விற்பனை செய்யக் கூடிய பெண்பிள்ளை ஒன்று தேவை. நேரில் சமுகம் தரவும். சங்கரப்பிள்ளை அன்சன்ஸ், இல. 21, மக்கள் நவீன சந்தை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (31337)

நல்ல நிலைமையிலுள்ள தராசுப் பத்தல், ஸ்கில் கமரா விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும். KR: 270, கனகரத்தினம் வீதி, நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம். (31330)

## திருத்துதல்

றபர் ஸ்ராம், டேற் ஸ்ராம், பிளாஸ்டிக் நேம்போட், விளம்பர போட் உடனுக்குடன் செய்து கொள்ளவும். பழைய வைற்றைத் திருத்திப் பெற்றுக் கொள்ளவும். "விமா றபர் ஸ்ராம்ஸ்" 234, நாவலர் வீதி (ஆனைப்பந்தி வைத்தியசாலை முன்பாக), யாழ்ப்பாணம். (31316)

## கணித வகுப்புகள்

பிரத்தியேக A/L தூய, பிரயோக கணித வகுப்புகள். London A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பிரத்தியேக கணித வகுப்புகள். தொடர்பு: க. உமாசுதன் (M. Sc. அமெரிக்கா), கிழமை நாட்களில் பொருண்மிய நிறுவனம், தாவடி. சனி, ஞாயிறு: 112 பலாலி வீதி (வளாக அண்மையில்) (31344)

# மோசடி சம்பவம் குறித்து மேயர் விசாரிக்கப்பட்டார்

கொழும்பு, ஜூன் 11

சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான எரிபொருள் மோசடி செய்யப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பாக தெஹிவளை — மவுண்ட் லவனியா மேயர் கசில் ஜயசிங்காவும் மற்றும் இருவரும் இரகசியப் பொலிஸாரினால் விசாரிக்கப் பட்டனர். (ஒ—எ)

# இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தி நிலையத்தில் (குளப்பிட்டி) வேலை வாய்ப்புகள்

- ★ மட்கல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரும், ஆர்வம் உள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.
- ★ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- ★ வயதெல்லை கிடையாது.
- ★ உற்பத்திக்கான பயிற்சி இந்நிலையத்தில் வழங்கப் படும்.
- ★ பயிற்சியின்போது ஊக்குவிப்பாக உதவுதொகை வழங்கப்படும்.
- ★ பயிற்சியின் பின் நிலையத்திலேயே ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
- ★ பயிற்சியின் பின் சுயமாக தொழில் செய்ய விரும்பின் அதற்கான முதலீட்டு உதவிகள் வழங்கப் படும்.

நேரில் தொடர்பு கொள்ளுங்கள்:

"சக்திப் பகுதி"

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,

அரசியல்துறை - தமிழீழ விடுதலைப்புலிகள்,

காங்கேசன் துறை வீதி,

தாவடிச் சந்தி, தாவடி.

தமிழீழம்.

(சி-8404)

உ

சிவமயம்

ஓம் விராட் விஸ்வப்பரஹ்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவவருஷம் வைகாசி மாதம் இருபத்தெட்டாம் நாள் (11-06-94) சனிக்கிழமை பகல் 11-30 மணி முதல் 12-30 மணி வரையுள்ள புனர்பூச நட்சத்திரமும், சிம்மலக்கினமும், சித்தயோகமும் கூடிய ★ சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| திரு. திருமதி சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் **நந்தகுமார்** அவர்களுக்கும் | திரு. திருமதி மகாலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **ஜெயமஞ்சுளா** அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைபவ இடம்:

FRIEDRICH WILHELM STR. 19, 58511 LUDENSCHEID, GERMANY.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

உறவினர்களும், நண்பர்களும்

திரு. திருமதி சிவசுப்பிரமணியம், "நந்தவாசம்", சொர்ண வடலி, கொக்குவில் மேற்கு, இலங்கை.

திரு. மகாலிங்கம், கொக்குவில் மேற்கு, கொக்குவில், இலங்கை.

இருவீட்டார் அழைப்பு [31383]

# கண் நோய்க்கு சிகிச்சை ஆரம்ப நிலையிலே பெறுக

## வைத்திய அதிகாரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தற்சமயம் பரவி வரும் கண் நோய்க்கு ஆரம்ப நிலையில் தகுந்த சிகிச்சை எடுக்கவேண்டும். தவறின் நோயின் தாக்கம் அதிகரித்து கண்களின் பார்வை பாதிக்கப்படலாம்.

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி முன் கண்டவாறு எச்சரித்திருக்கிறார்.

கண்நோய் தொடர்பாக அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இக் கண்நோய் பொதுவாக கடும் வெய்யில் காலத்திலும் இலையான், கொசு, தூசினால் பரவுகிறது. மக்கள் தனி நபர் சுகாதாரம் பேணப்படாத நிலையில் இது வேகமாக இதர குடும்ப அங்கத்தவர்களுக்கும் பரவுகிறது;

இந் நோய் கண்டவுடன் ஒரு வைத்தியரிடம் காண்பித்து அதற்கான சிகிச்சை எடுத்தல் வேண்டும்;

இந் நோய் ஏனையோருக்கு பரவாமல் இருக்க மக்கள் கூடும் இடங்களுக்கு நோய் குணமடையும் மட்டும் செல்லாதிருத்தல் வேண்டும்.

ஏனைய குடும்ப உறுப்பினர்கள் நெருங்கிப் பழகுவதையும், நோயாளியின் பாவனையில் உள்ள பொருட்கள் பாவிக்கப் படுவதையும் தவிர்த்தல் வேண்டும்.

குணம், குறிகளைப் பார்க்கும் போது இந் நோய் பக்ரீரியாவினால் ஏற்படுகின்றது போல் நோய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் தகுந்த சிகிச்சை எடுப்பதுடன், போஷாக்கு நிலையையும் கவனித்தல் நல்லது.

— இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மாணவருக்கு யுனிசெவ் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 12 ஆயிரம் பாடசாலை உபகரணப் பெட்டிகளை வழங்குவதற்கு யுனிசெவ் நிறுவனம் வழங்க முன் வந்துள்ளது.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு யாழ். அரச அதிபர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அந்த அமைப்பு இப்பொருள்களை விரைவில் இங்கு அனுப்பவிருக்கிறது. (எ-3)

# திருத்தப்படும் மாநகரசபை வீதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

றுகுணு கப்பலில் யாழ். மாநகரசபைக்கு எடுத்து வரப்பட்ட 300 பரல் தார் மூலம் மாநகரசபை வீதிகளை செப்பனிடும் வேலைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பழம் வீதி, கன்னாதிட்டி இரண்டாம் குறுக்குத் தெரு, மூன்றாம் குறுக்குத் தெரு, சோமசுந்தரம் அவனியூ, புங்கன் குளம் வீதி, இலந்தைக் குளம் வீதி, ஆனந்தன் வடலி வீதி, ஆஸ்பத்திரி வீதி, முஸ்லிம் கல்லூரி வீதி ஆகிய வீதிகளுக்கு இரண்டாம் முறை தார் ஊற்றும் வேலைகள் நடைபெற உள்ளன.

மாட்டீன் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, சிவன் வடக்கு வீதி, (வண்ணார்பண்ணை) நாவலர் வீதி ஆகியவற்றில் உள்ள குண்டுகளும் குழிகளும் நிரப்பப்பட உள்ளன.

இராமநாதன் வீதி, கன்னாதிட்டி வீதி, கி. பொன்னம்பலம் வீதி போன்ற வீதிகள் திரும்ப கல்லிடப்பட்டு தார் ஊற்றப்பட உள்ளன. (இ-162)

# தேசிய பயிலுநர் சபை பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தேசிய பயிலுநர் சபையால் நடத்தப்படும் பயிற்சிகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளையில் நடத்தப்படவுள்ளன.

இதற்காக தட்டச்சு, சுருக்கெழுத்து (தமிழ், ஆங்கிலம்), தையல் பயிற்சி, உதவித் தாதியர் பயிற்சி ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. அவர்கள் வதியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு - செஞ்சிலுவைச் சங்க பிரிவு அவர்களைத் தெரிவு செய்து யாழ். கிளைக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர் முகப் பரீட்சை முறையே இம்மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் கிளையில் நடைபெறவுள்ளன. பயிற்சிகள் இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. பயிற்சியின் போது மாணவர்களுக்கு சிறு தொகை உதவிப் பணமாக வழங்கப்படும். (க)

# ராணி ஜுவலர்ஸ் இடமாற்றம் அறிவித்தல்

இதுவரை இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்

**11 - 06 - 1994** சனிக்கிழமை முதல் சற்று முன்பாக கஸ்தூரியார் வீதியில் (இல. 246) எனும் முகவரிக்கு

# ராணி நகையகம்

எனப் பெயர் மாற்றப்பட்டு இயங்கும் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்,

செ. இலட்சுமணன்.

[சி-8265]

# IN EVER LOVING REMEMBRANCE OF NAVARATNAM NAVAREUBAN

(Dearly beloved husband of Preminie, Father of Nishan and Dilan, Son of Mr. & Mrs P. M. Navaratnam and Son - in - law of Mr. & Mrs C. A. Balasingham.)

On

His Birthday 11th June - who died under tragic circumstances on 13 - 01 - 1994

"I have a Home above,
From Sin aud Sorrow Free
A mansion which internal Love
Designed and formed for me"

Fondly Remembered by His Father - in - law, Mother - in - law, Brother - in - law, Relations and Friends.

Nooyl 11 - 06 - 1994 [C-5702]

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

நல்லூர் பிரிவு

## தையல் - கைப்பணி நிலைய திறப்பு விழா

காலம்: **12 - 06 - 94** ஞாயிறு பிற்பகல் 4 மணி

இடம்: பருத்தித்துறை வீதி (கல்வியங்காடு சந்தைக்கு அருகில்)

பிரதம விருந்தினர்:

திரு. M. சிவயோகசுந்தரம் (யாழ். கிளையினதும் நல்லூர் பிரிவினதும் போஷகர், பயிற்சி முகாமையாளர், வடக்கு - கிழக்கு மாகாண தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை)

சகல பிரிவின் அங்கத்தவர்களையும் தொண்டர்களையும் தையல் பயிற்சி பழைய புதிய மாணவிகளையும் இவ்விழாவில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- கௌரவ செயலாளர்.

[31350]

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 — 11 — 1936

உதிர்வு: 11 — 06 — 1986

## அமரர் குணரட்ணம் சிவபாதம்

(உதவி முகாமையாளர், இலங்கைவங்கி பருத்தித்துறை)

அன்பின் திரு உருவே பண்பின் உறைவிடமே
பாசத்தின் ஒளி விளக்கே எங்கள் அப்பாவே
காலனுடன் நீர் சென்று எட்டாண்டு சென்றதையா
காத்திருந்த எங்களையும் ஏமாற்றியது ஏனையா
ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவுடன்,
மனைவி, மகளமார், மகன்,
உறவினர், நண்பர்கள்.

"குரு இல்லம்"
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(31346)

# 13ஆவது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா கனகசுந்தரம்

பூவுலகில்: 17 — 02 — 1932

பொன்னுலகில்; 04 — 06 — 1981

திதி: 11 - 06 - 1994

ஆண்டுகள் ஒன்றென்ன இரண்டென்ன
ஒரு நூறு சென்றாலும்,
எம்மில் அணையாத ஒளியாக
நிரந்தரமாய் நிறைந்த
எம் இனிய தந்தையே!
என்றென்றும் எம்முடன் துணையிருப்பீராக!

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

மீசாலை வடக்கு,
மீசாலை,

(சி-8431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
393/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில்..

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடங்கி நான்கு ஆண்டுகள் விரைந்து கடந்து விட்டன. ஆயினும் அது முடிவுறும் என்று நம்புவதற்கான சிறு கீற்றுதானும் தென்படவில்லை. அதற்குப் பதிலாக யுத்தம் மேலும் நீண்டு கொண்டு போவதற்கான அறிகுறியே தெரிகிறது.

ஈழம் வாழ் தமிழர்களை அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்பது சிங்களத் தலைவர்களின் நீண்டகால "அபிலாசை". அதனால் அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே எல்லாத் துறைகளிலும் நடத்துகிறார்கள்.

ஆனால் தமிழர்களோ, தாம் தமது தாயகப் பூமியில், சுதந்திரமாக, உரிமைகளுடன் வாழ விரும்புகிறார்கள். அதுவே அவர்களது அரசியல் அபிலாசை. தமது தலைவிதியை, வாழ்வை தாமே நிர்ணயித்து வளத்துடன் வாழ வேண்டும் என்பது அவர்களின் இலட்சியம்.

இருசாராரின் அபிலாசைகளும் ஒன்றுக்கு மற்றது முரணாகிவிட்டதால், இருவரும் மோதிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது; சிங்களத் தலைவர்களின் அநீதியான உலக தர்மத்துக்கு ஒவ்வாத "அபிலாசை" விட்டகலும் வரை இருசாராரின் மோதலும் தொடரும்; யுத்தமும் தொடரும்.

கடந்த நான்கு ஆண்டு யுத்தத்தினால் தமிழர்களுக்குத்தான் பாதிப்புகள் அதிகம். ஆயிரக்கணக்கான தமிழர்கள் யுத்தத்துக்குப் பலியானார்கள். அதேபோன்று இன்னும் ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்கள் ஆனார்கள்; லட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்தவர்களாகவும், அகதிகளாகவும் மாற நேர்ந்தது.

தமிழர்களின் இயல்பு நிலை வாழ்க்கை பாதிக்கப்பட்டு விட்டது. போக்குவரத்து, பொருளாதாரத் தடைகளால் போதிய உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் இன்றி நாளாந்த வாழ்க்கை சீர்கெட்டுவிட்டது. கல்வி, உற்பத்தி என்று எல்லாத்துறைகளிலும் பாதிப்பு.

எனினும் தமிழர்கள் தாம் உரிமையுடைய, சுதந்திரமான மக்களாக வாழ வேண்டும் என்ற தமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறார்கள். இப்போது உருவாகியுள்ள பாதிப்பான வாழ்க்கையையே இயல்பு நிலை வாழ்க்கையாக்கிக் கொண்டு விட்டார்கள்.

பாதிப்புகளைப் படிப்பினையாகக் கொண்டு புதிய வாழ்க்கை முறைகளையும், சமூக, பொருளாதாரக் கட்டமைப்புகளையும் உருவாக்கி வருகிறார்கள். எனவே இராணுவத் தீர்வு ஒன்றின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை அழித்து விட முடியாது என்பதனை நான்காண்டு யுத்தத்தின் முடிவிலாவது சிங்கள அரசியல் தலைவர்கள் உணர வேண்டும்.

யுத்தத்தினால் தமிழர்களுக்கே அதிக பாதிப்பு உண்டாகிறது எனினும், தென்னிலங்கை மக்களுக்கும் அரசுக்கும் பெரு நஷ்டங்கள் உண்டு என்பதை அந்தத் தரப்பார் மறைத்துவிட முடியாது; மறந்து விடவும் முடியாது. யுத்தம் தொடர்வதால் அங்கு பெரும் பொருளியல் பின்னடைவுகள் உருவாகியுள்ளன.

தேர்தல் ஆண்டான இந்த வருடத்தில் அதனை உணர்ந்து இனப் பிரச்சனைக்கு நியாயமான தீர்வை சிங்கள அரசியல் வாதிகள் முன்வைக்கத் தவறினால், அதன் பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்து யுத்தம் நீடித்துச் செல்லும்.

வடக்கு-கிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான் என்று ஜனாதிபதி நான்கு நாட்களுக்கு முன்னரும் பேசியிருக்கிறார். விடுதலைப் புலிகள் மட்டும் உரிமைகளுக்காய் போராடவில்லை. தமிழ் மக்களும் போராடுகிறார்கள். இதனை சிங்களத் தலைவர்கள் இன்னும் உணரவில்லை.

அவ்வாறாயின் நிலைமை மாறுவது எப்படி? பிரச்சினை தீர்வது எவ்வாறு? சமாதானம் பிறப்பது எங்ஙனம்?

யுத்தமும் இரத்தக்களரியும், தொடரும் என்பதில் என்ன சந்தேகம்?

---

வடக்கு, கிழக்கு யுத்த வலயம் பிரிக்கப்பட்டு

# 5 பிராந்தியங்களுக்கு பொறுப்பாக இராணுவ அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜூன் 11

வடக்கு - கிழக்கு யுத்த வலயத்தை ஐந்து தனித் தனிப் பிராந்தியங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பொறுப்பாக ஐந்து இராணுவ அதிகாரிகளை அரசாங்கம் நியமித்துள்ளது.

மேஜர் ஜெனரல் ஏ. எம் யூ. செனவிரத்ன புத்தளம், வவுனியா, அனுராதபுரம், மன்னார் மாவட்டங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் பூநகரிக்குப் பொறுப்பாக பிரிகேடியர் பட்ரிக் பெர்னாண்டோவும் —

வெலிஓயா [மணலாறு] மற்றும் திருகோணமலைப் பகுதிகளுக்குப் பொறுப்பாக பிரிகேடியர் ஜி. பீரிஸும் —

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் லக்கி விஜயரத்தினாவும் —

யாழ். குடாநாடு மற்றும் தீவுப்பகுதிகளுக்குப் பொறுப்பாக பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-எ)

---

## சோனியா காந்தி மீண்டும் அரசியலில்



### டில்லி மாநாட்டில் உற்சாக வரவேற்பு

புதுடில்லி, ஜூன் 11

சோனியா காந்தி இந்திய அரசியலில் நேரடியாகப் பங்குபற்ற ஆரம்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று புதுடில்லியில் ஆரம்பமான இரண்டு நாள் இந்திரா காங்கிரஸ் மாநாட்டுக்கு சோனியா காந்தி வந்தபோது அவருக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோனியா காந்தி பின்னர் மேடையில் ஏனைய காங்கிரஸ் தலைவர்களுடன் அமர்ந்து இருந்தார்.

1991 இல் ராஜீவ் காந்தி கொலையுண்ட பின்னர் நேரடியாக அரசியலில் கலந்து கொள்ளாது சோனியா காந்தி ஒதுங்கியிருந்து வந்தார்.

அவர் மீண்டும் அரசியலில் பிரவேசித்திருப்பது, இவ்வாண்டின் இறுதியில் பத்து மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்களை சந்திக்கவிருக்கும் காங்கிரஸாருக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஜயவிக்ரம பெரேரா நேற்று பதவிப்பிரமாணம்

கொழும்பு, ஜூன் 11

ஐ. தே. க. தேசியப் பட்டியல் எம்பியாக காமினி ஜயவிக்ரம பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஏற்கனவே பதவி விலகிய அலிக் றொபர்ட்சனின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சபாநாயகர் முஹம்மது அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். (இ-எ-க)

---

யூனிற்றா கிளர்ச்சிப் படைகளுக்கு எதிராக

## அங்கோலா படையினர் நடத்திய தாக்குதலில் 89 மாணவர்கள் பலி!

லுவாண்டா, ஜூன் 11

அங்கோலாவில் யூனிற்றா கிளர்ச்சிப் படைகளுக்கு எதிராக அரசுப் படையினர் நடத்தி வரும் தாக்குதலில் 89 பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை அரச விமானப் படையின் போர் விமானம் ஒன்று நடத்திய குண்டுத் தாக்குதலில் பாடசாலை ஒன்று அழிக்கப்பட்டது. அப்போதே இம்மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

விமானப் படையினரின் இலக்கு தவறியதால்தான் இந்த அழிவு ஏற்பட்டதாகக் கூறிய அங்கோலா அரசு, மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டது குறித்து கவலையும் தெரிவித்தது.

யூனிற்றா கிளர்ச்சிப் படைகளுக்கு எதிராக அங்கோலா அரச இராணுவம் நடத்தி வரும் தரைவழித் தாக்குதல்களுக்கு விமானப் படையின் உதவியையும் பெற்று வருகின்றது. (ஒ-எ)

---

### ஆலயங்களில்

இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் ஆலய இரதோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும். (க)

★ ★ ★

வட்டுக்கோட்டை கல்வியங்காடு ஸ்ரீநாகேஸ்வரி அம்பாள் (நாகதம்பிரான்) கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிமுதல் நடைபெறும்

★ ★ ★

புலோலி தெற்கு வெள்ளுகுலை நின்றற்தாய் பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க-173)

★ ★ ★

இருபாலை கிழக்கு கதிர்காம வேலாயுதர் ஆலயமகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறும். (அ)

★ ★ ★

அராலி தெற்கு கனவத்துறை ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் சென்ற 5 ஆம் திகதி ஆரம்பமாகியது. எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அலங்கார உற்சவம் நிறைவுபெறும். (க-17)

### கைதானோர் விடுதலை

கொழும்பு, ஜூன் 11

தலவாக்கலை லோகி தோட்டத்தில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை பொலீஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 12 பேரும் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

## நீலவானத்தை அண்ணாந்து பார்க்கும் அகதி மக்கள்!

### முகாம்களின் கூரைகள் மோசம்!!

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். குடா நாட்டில் உள்ள அநேகமான இடம் பெயர்ந்தோர் முகாம்களின் நிலைமை மோசமாகியுள்ளது. இடுகினால் வேயப்பட்ட கூரைகள் உக்கி உருக்குலைந்து போயுள்ளன. உள்ளே இருந்து அண்ணாந்து பார்த்தால் நீலவானம் தெரிகிறது.

இனி வரும் மாரி காலத்திற்கு இக் கூரைகள் திருத்தப்படாவிட்டால் முகாம்களில் இருப்பவர்கள் மீளவும் வேறு இடங்களுக்கு ஓடி படர வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த மக்களின் அவலநிலை குறித்து முகாம்களை நிர்வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் புகார் கூறப்பட்டுள்ளது.

அந்த நிறுவனங்களிடம் முகாம்களைத் திருத்துவதற்கான நிதி வசதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்த இடம் பெயர்ந்தோர் முகாம்களை திருத்துவதற்கான நடவடிக்கைகளை அரசே மேற்கொள்ள வேண்டும் என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை விளக்கி — முகாம்களின் அவல நிலையை சுட்டிக் காட்டி — குடிசைகளை புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு யாழ். அரச அதிபரிடம் இணையம் கோரியுள்ளது. (ஓ-162)

## சங்கானை பிரதேச செயலக போஷாக்கு வார நிகழ்வுகள்

### நாளை இறுதி நாள்; இன்று கண்காட்சி

வட்டுக்கோட்டை, ஜூன் 11

வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் போசாக்கு வாரக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 8 30 முதல் 5.30 மணி வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறும்.

நாளை ஞாயிறு பிற்பகல் 1 மணி முதல் போஷாக்கு வார நிறைவு நாள் நிகழ்ச்சிகள் வலி. மேற்கு பிரதேச செயலர் திரு. கா சந்திரராசா தலைமையில் அங்கு நடைபெறும்.

நிறைவு நாள் நிகழ்ச்சிகளில் வைத்திய கலாநிதி என். விவேகானந்தன் பிரதம விருந்தினராகவும், சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன், சங்கானை வட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ந. மதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. டிவகலால, இலங்கை செஞ்சிலுவை சங்க வலி. மேற்குக் கிளைத் தலைவர் திரு. நா. குமாரசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-161)

---

போட்டித் தலைவரை கொலை செய்ய

## சோதிடரின் ஆலோசனை பெற்றார் சொத்தி உபாலி!

கொழும்பு, ஜூன், 11

தமது போட்டித் தலைவரான சிந்தக அமரசிங்காவை கொலை செய்வதற்கு 'பாதாள உலக' தலைவரான சொத்தி உபாலி, சோதிடரின் ஆலோசனையைப் பெற்றார் என்று இது வரை நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் வைத்து இக்கொலையை செய்ய சொத்தி உபாலி திட்டம் தீட்டியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கொலையைச் செய்வதற்கான நல்ல நேரத்தை சோதிடர் நிச்சயித்த பின்னர், அக்கொலையைச் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் குடித்து மகிழ்ந்தனர் என்றும் —

அதன் பின்னர் சொத்தி உபாலி அவர்களையும் கூட்டிக் கொண்டு நீர்கொழும்பு நீதிமன்றத்துக்குச் சென்றார் என்பதும் விசாரணையில் வெளியாகியுள்ளது.

எனினும் இக்கொலை முயற்சியில் இருந்து சிந்தக உயிர் தப்பிவிட்டார். அவரைச் சுட்டவரைப் பொலீஸார் சுட்டுக் கொன்று விட்டனர்.

விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும், விரைவில் பாதாள உலகக் கோஷ்டிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடும் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

## கிளிநொச்சியில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கடந்த புதன்கிழமை இரவு ஸ்ரீலங்கா படையினர் கிளிநொச்சியை நோக்கி சரமாரியாக ஷெல் தாக்குதலை நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

---

## இலவச நுண்கலை வகுப்புகள் நாளை ஆரம்பம்

அரியாலை, ஜூன்11

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தால் இலவசமாக நுண்கலை வகுப்புக்களை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மிருதங்கம், நடனம், பண்ணிசை மற்றும் சமய வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படும்.

நுண்கலை வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிவயோக சுவாமி ஆச்சிரமத்தில் உள்ள மேற்படி மன்ற பணிமனையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். (ஓ-17)

### புலிகளின் குரல் வானொலியில்

11 - 06 - 1994

சனி இரவு

★ 8-01 — லெப்ரினன்ட் கேணல் புலேந்திரன் / சாள்ஸ் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "கடலோரக்காவலன்"
★ 8-25 — நேயர் அடிதங்கள்
★ 8 - 30 — செய்திகள்
★ 8-40 — கவிதா நிகழ்வு "புலரும் பொழுதாய்"

12 - 06 - 1994

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7 35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## ஹேமா கேட்டாலே ராஜினாமா

கொழும்பு, ஜூன் 11

ஹேமா பிரேமதாஸா கேட்டால் மட்டுமே தாம் ஐ.தே.க. தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்யத் தயாராக இருப்பதாக ஜாலிய ஒபேசேகர சண்டாதிப நாளிதழுக்குத் தெரிவித்தார். (ஒ-எ-6)

---

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி தொடரில் இன்று சனிக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் ஆடும் அணிகள் வருமாறு:

★ காலை 8-30 மணி: சிவன் இளைஞர் வி. க. எதிர் ஆர். கே. வி. க. அணி.

★ காலை 10 மணி: கிப்ஸ் வி. க. அணி எதிர் நோதேன் (பச்சை) வி. க. அணி.

★ பி. ப. 1 மணி: ஈச்சமோட்டை சனசமூக நிலைய "ம" அணி எதிர் கிறீன்பீல் வி. க. அணி.

★ பி.ப.2-30மணிபொற்பதி "பி" வி. க. எதிர் அரியாலை ஐ. வி. க. அணி. [ஒ-17]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் இன்று சனிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

15 வயதுப் பிரிவு

★ யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி.

★ ஸ்கந்தவரோதய மைதானத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் கனகரத்தினம் ம.ம. வி.

★ மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் மகாஜனாக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி

★ யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ் இந்துக் கல்லூரி எதிர் யாழ் மத்திய கல்லூரி.

17 வயதுப் பிரிவு

★ யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ் மத்திய கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி.

★ கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்— கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில்— மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சென்பற்றிக்ஸ்கல்லூரி

★ சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் — சென் ஜோன்ஸ் எதிர் யூனியன் கல்லூரி.

மேற்படி போட்டிகள் யாவும் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும். [ஒ-20]

★ ★ ★

'உதயன்' கிண்ணத்துக்காக பருத்தித்துறை விளையாட்டுக் கழகம் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையே —கழக மைதானத்தில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

★ 4-00 — கே. கே. எஸ். பல்நோக்கு வி.க. அணி எதிர் கன்னங்கி வி.க. அணி;

★ 4-45 — அளவெட்டி விநாயகர் வி.க. அணி எதிர் பொலிகை விநாயகர் வி.க. அணி

★ ★ ★

யாழ். மாவட்ட வியோ கழகம் மாவட்ட கழகங்களுக்கிடையில் நடத்தும் கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு அடைக்கல மாதா கோவிலுக்கு முன்பாக ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்

பங்குபற்றும் அணிகள் வருமாறு!

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் மாவிப்பாய் பரிஷ் வியோ கழகம்.

★ யாழ். வட்ட வியோ கழகம் எதிர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி வியோ கழகம்.

★ யாழ். பரியோவான் கல்லூரி வியோ கழகம் எதிர் யாழ். இந்துக் கல்லூரி வியோ கழகம்.

★ சாவகச்சேரி நகர வியோ கழகம் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி வியோ கழகம். (இ-3)

★ ★ ★

தாவடி மத்திய சனசமூக விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்த விளையாட்டுப் போட்டிகளுக்கான இறுதி ஆட்டம் இன்று இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை தாவடி திறந்த வெளி அரங்க மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டிகளுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு க. டிவகலால பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-3]

### நாளை

யாழ்ப்பாணம் வந்திருக்கும் பிரடிரிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோதி (செல்வி) பார்ரோடன்சைக் கௌரவிக்கும் முகமாக ஒரு வரவேற்பு உபசார விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். புனித மரியாள் றோ. க. த பாடசாலையில் நடைபெறும். (க)

### பாடசாலைகளில்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1.00 மணிக்கு அதிபர் திரு. அ.மு அருணாசலம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (க—90)

### மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஊர்காவற்றுறை — வேலணை பிரதேச செயலர் பிரிவுகள் இணைந்து நடத்தும் மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

மேலதிக அரச அதிபரும், ஊர்காவற்றுறை — வேலணை பிரதேசசெயலருமான திருமதி ப. திலைநாயகம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு கே. பரமேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-3)

---

## பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்குரிய வேலைகள் உடன் செய்யப்படும்

### மதிப்பீடுகளை அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 1993இல் திட்டமிடப்பட்ட வேலைகளை விரைவில் செய்து முடிக்க யாழ். மாவட்டச் செயலக மத்திய திட்டமிடல் பணிமனை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

1993இல் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றிய பின்னர் 1994ஆம் ஆண்டுக்குரிய வேலைகளை ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று நிறுவனங்கள் 1993 இல் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளுக்குரிய மதிப்பீடுகளை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட இணைப்புக் குழுவின் தலைவரான யாழ். அரசாங்க அதிபரின் அனுமதியின் பொருட்டு திட்டமிடல் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கை திட்டமிடல் பணிப்பாளர் [illegible] சுவாமிநாதன் [illegible] கேட்டுக் கொண்டுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தொடர்பான மாவட்ட இணைப்புக்குழுவின் கூட்டம் ஒன்று கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்றது.

கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் — [illegible] ஏற்கனவே கிடைத்துள்ள 70லட்சம் ரூபாவை விரைவில் செலவு செய்து கணக்குக் காட்டுமாறும் ஒழிய மீளளிப்பு நிதி வழங்கப்பட மாட்டாது என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. ஆகவே வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்,

> ஏர் வரிசைகண்டு ஏற்ற முடன் வாழ்ந்த இனம்
> சீர் வரிசைகேட்டு சேற்றினிலே விழலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE CEYLON

# யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

யாழ்ப்பாணம்

**1994/1995** கல்வியாண்டு

யாழ். பல்கலைக்கழகம்

கலைமுதற் தேர்வு **GAQ**

வெளிவாரி விரிவுரைகள்

ஆரம்பமாகி நடைபெறுகின்றன

★ பாடங்கள்:

1. கிறிஸ்தவ நாகரிகம்
2. English Literature ஆங்கில இலக்கியம்
3. Linguistics மொழியியல்
4. அரசியல் விஞ்ஞானம்
5. பொருளியல்
6. தமிழ்
7. இந்துநாகரிகம்
8. மெய்யியல்
9. அளவையியலும் விஞ்ஞான முறையும்
10. அடிப்படை ஆங்கிலம் Basic English
11. அடிப்படைக் கணிதம் Basic Maths

★ கற்க விரும்புவோர் உடனே சேர்ந்து கொள்ளவும்.

விபரங்கட்கு:

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
464, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8280)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 – 02 – 1922

மறைவு: 12 – 05 – 1994

### திருமதி நடராசா சிவஞானவல்லி

பாசம் தனைப் பொழிந்து எம்மை வாழ வைத்த
அன்புத் தெய்வமே
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு எங்கு சென்றீர்கள்
உங்கள் திருமுகம் இனி எப்போ காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்புக்கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கட்டுடை,
மானிப்பாய்.

(31357)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 – 05 – 1907

மறைவு: 23 – 05 – 1993

### திருமதி பொன்னம்மா முத்தையா

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரம்

முத்தொடு சேர்ந்த பொன்னே பொன்னம்மா
பத்தியொடு பரவினோம் பரிதவித்தோ முன்பிரிவால்
ஆண்டு ஒன்று போனால் அன்பு மாறிடுமோ
நீண்டதுயரம் கொண்ட எம்இதயம்
தீண்டி எரியும் சுடர் விளக்கே துயர்
தாண்டி நாமும் நாமும் கரைசேர
சாந்தி பெறுவாய்! சாந்தி பெறுவாய்!
சாந்தி சாந்தி சாந்தி.

எங்களின் மத்தியில் வாழ்ந்து யாம் எதிர் பாராத வகையில் எம்மைவிட்டகன்று வருடம் ஒன்று கழிந்து விட்டது. உமது பிரிவையிட்டு வருந்தும்:

அன்புள்ள
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்,
பூட்டிமார்.

மு. கணேசலிங்கம் தம்பதிகள்
டச் றோட்,
உடுவில்.

(7233)

# வடபகுதி முகாம்களைச் சுற்றி போராளிகள் உஷார் நிலையில்!

## ராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, ஜூன் 11

யாழ். குடாநாடு, முல்லைத்தீவு, ஆனையிறவு பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றி விடுதலைப் புலிகள் தங்கள் நிலைகளைப் பலப்படுத்தி உஷார் நிலையில் இருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

இராணுவத்தினர் தங்கள் முன்னணி பாதுகாப்பு நிலைகளை உடைத்துக் கொண்டு முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தும் விதத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமைந்திருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மேலதிகமாக இப்பகுதிகளில் கண்ணிகளை விடுதலைப் புலிகள் புதைத்து வைத்துள்ளனர். விமான மற்றும் கனரக ஆட்டிலறி தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய பலமான பதுங்கு குழிகளை அமைப்பதிலும் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வரும் அறிகுறிகள் தென்படுவதாகவும் அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை — இராணுவ முகாம்களின் முன்னணி காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் —

இராணுவத்தின் பாதுகாப்பு நிலவரம் எப்படியிருக்கிறது என்பதைக் கண்டறியும் விதமான தாக்குதல்களாக இவை அமைந்துள்ளன என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையில் — யாழ். குடாநாட்டின் மேற்கே உள்ள தீவுகள் மற்றும் மன்னார் மீது விடுதலைப் புலிகள் கடல் — தரை வழித் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

வடபகுதி மீது பாரிய யுத்தம் ஒன்றுக்கு படையினர் தயார் செய்வதை தடுக்கும் நோக்கத்துடனும் —

பாதுகாப்பு நிலைவரத்தை பலவீனப்படுத்தும் முயற்சியாகவும் விடுதலைப் புலிகள் இக்கடல் — தரைவழித் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்றும் பாதுகாப்புப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர்.

கடற்புலிகளான ஆண், பெண் போராளிகளுக்கு பயிற்சி வழங்குவது உட்பட கடற்புலிகளின் நடவடிக்கைகளில் தீவிரம் காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அரச படையினரின் தரை — கடல்வழித் தாக்குதலை நடத்தும் பட்சத்தில், அதனை எதிர்த்து முறியடிப்பதற்காக நடமாடும் போராளிப் பிரிவுகளை அமைப்பதிலும் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளதாக நம்பப்படுவதாகவும் "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

குடாநாட்டில் இராணுவத்தினர் முகாம்களில் இருந்து வெளியேறி முன்னேறுவதற்கு உதவியாக கரையோரப் பகுதியில் படையினர் தரை— கடல் வழியாக இறங்குவர் என்று விடுதலைப் புலிகள் திடமாக நம்புவதாகவும் "த ஐலண்ட்" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 11

தமிழரின் பாரம்பரிய விளையாட்டான தாச்சி விளையாட்டை ஊக்குவிக்குமுகமாக யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கழகங்களுக்கிடையிலும் ஒரு சுற்றுப்போட்டியை யாழ். றோட்டரிக் கழக ஆதரவுடன் நடத்த யாழ். மிட்ரவுண் றோட்டரிக் கழகம் தீர்மானித்துள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் கழகங்களுக்கான கூட்டம் ஒன்று இன்று மாலை 4.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## யாழ். பல்கலைக்கழக அலுவல்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட அடையாள வேலைநிறுத்தத்தால் பல்கலைக்கழக வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பவியலாளர்களின் உள்ளகரீதியான நியமனம் தொடர்பாக அமுல் செய்யப்பட்ட நடைமுறையை கண்டித்து பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேற்று வாய்மொழிப் பரீட்சை நடைபெறவிருந்த மண்டபத்தின் வாசலில் சத்தியாக்கிரகம் போராட்டத்திலும் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக நிர்வாகம் சங்கத்துடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை என்றும் —

நிர்வாகத்தின் அடுத்த நடவடிக்கையைப் பொறுத்து தமது அடுத்த நடவடிக்கை அமையும் என்றும்— ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைநிறுத்தத்தால் பல்கலைக்கழக செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதாகவும் — அவசர சேவைகள் பாதிக்கப் படவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## 7, 250 பரல் மண்எண்ணெய் மாஹோ கப்பலில் வருகிறது

### நாளையே இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.மாவட்ட மக்களுக்கான ஜூன்மாதக் கோட்டாவான 7 ஆயிரத்து 250 பரல் மண்எண்ணெய்யுடன் 'மாஹோ' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கொழும்பில் இருந்து நேற்று மாலை வடக்கு நோக்கிப் புறப்படவிருந்த இக்கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் — கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நாளையே ஆரம்பிக்கப் படும் எனவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## கூட்டுறவாளர்கள் கண்டனப் பேரணி

### யாழ். நகரில் 21 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூன் 11

நீர்வேலிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் தலைவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து—

யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்கள் நடத்தவிருந்த கண்டனப் பேரணி எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 30 மணிக்கு யாழ். நகரில் நடைபெறும்.

நேற்றுக் காலை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் இதன் உபதலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

இப்பேரணி பற்றிய ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை பதினொரு மணிக்கு அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற் சங்கத் தலைவர்கள் செயலாளர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி நீர்வேலியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சின் போது நீர்வேலிப் பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி மரணமானது தெரிந்ததே.

மற்றும் இவரது மகள், மருமகள் ஆகியோரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டிருந்தனர். (இ-163)

### பியோன் போன்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பதவி நீக்கம் திடீரென வந்தது. நான் இதனை எதிர் பார்க்கவில்லை.

இதனை நான் எதிர்த்து நடவடிக்கை எடுக்கப் போவது இல்லை.

ஆளுநர் ஒருவரை தாம் நினைத்தபடி "டிஸ்மிஸ்" செய்யலாமென்றால் மாகாண சபைகளின் பின் என்ன தான் இருக்கிறது? ஜனாதிபதி தாம் நினைத்ததை எல்லாம் செய்யலாம்.

என்னை "டிஸ்மிஸ்" செய்தது அரசியல் சாசனப்படி சரியானதில்லை.

இனியும் நான் அரசியல் பதவிகளை ஏற்கப்போவதில்லை. ஒரு தரம் பட்ட அனுபவம் போதும்.

இப்படி திரு. சர்வானந்தா தெரிவித்தார் (இ-எ)

### மேல்மாகாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்னர் நேற்று நண்பகலுக்குப் பின்னர் — சுமார் 1.30 மணியளவில் "ஆளுநர் பதவியில் இருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளீர்" — என்று கூறும் ஜனாதிபதியின் எழுத்து மூலமான உத்தரவு விசேட தூதர் மூலம் சர்வானந்தாவிடம் நேரில் கையளிக்கப் பட்டது.

இத்தகவல்களை எல்லாம் திரு. சர்வானந்தா வெரித்தாஸ் வானொலிக்குத் தெரிவித்தார்.

முதலமைச்சர் சந்திரிகாவின் ஆலோசனையின் பேரில், சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து பிரேமரத்ன குணசேகரவை ஆளுநர் அகற்றியிருந்தார்.

திரு. குணசேகரா, ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் காமினி அணியைச் சேர்ந்தவர் என்பதும் —

ஆளும் ஐக்கியதேசியக் கட்சிக்கு நெருக்கமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-எ-6)

### தேசிய சுகாதார வார இறுதிநாள் நிகழ்ச்சிகள்

யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் தேசிய சுகாதார வாரத்தின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை பெருமாள் கோவிலடியில் இயங்கும் காரைநகர் தியாகராசா மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்

யாழ் பாவர் பாடசாலையிலும் இந்துமகளிர் கல்லூரியிலும் இறுதிநாள்நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பரிசில் வழங்கும் வைபவம் போன்றவை இடம்பெறும்.

### தொண்டா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்துக்குப் 1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பின்னர் இணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணம்- அதாவது வடக்கு - கிழக்கு மாகாணம் இணைப்பு அடிப்படையாக இருக்கவேண்டும் என்று தமிழ்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன - என்றும் பி. பி. ஸி. கருத்து வெளியிட்டது. (இ-8-6)

## ஜனாதிபதித் தேர்தலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலும், கிழக்கிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் — எஞ்சிய பகுதிகளில் அத்தேர்தலை அரசாங்கம் நடத்தினால் கூட — வாக்குகளை எண்ணி தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாது.

அதாவது தற்போதைய சட்ட ஏற்பாடுகளின்படி வடக்கு, கிழக்கையோ அல்லது நாட்டின் வேறு ஏதேனும் பகுதியையோ ஒதுக்கிவிட்டு ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் நடத்தி முடிக்க முடியாது.

ஆனால் வடக்கும், கிழக்கின் ஒரு பகுதியும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அங்கு ஸ்ரீலங்கா அரசு தேர்தலை நடத்துவது என்பது முடியாத காரியம் என அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

### கிழக்கிலும் அசாத்தியம்

கிழக்கில் படையினரைக் குவித்து உள்ளூராட்சித் தேர்தல்களை அரசு நடத்தியிருந்தாலும் கூட, அத்தகைய முயற்சி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகரமாக அமையும் என எதிர்பார்க்க முடியாது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தேர்தலை நாடு முழுவதிலும் நடத்தும்போது பாதுகாப்பு படையினரின் பணியும் வலுவும் நாட்டில் பரவலாக்கப்பட்டிருக்கும் அவ்வேளை உள்ளூராட்சித் தேர்தலின் போது குவித்தது போல படையினரை கிழக்கில் குவிக்க முடியாது.

எனவே வடக்கு, கிழக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாத நிலையில் இருக்கும் அரசு அப்பிரச்சினையிலிருந்து தப்புவதற்கு இரண்டு வழிகளை நாட வாய்ப்புண்டு.

1. சட்ட விதிகளை மாற்றுவது.
2. புலிகளின் ஒத்துழைப்புடன் வடக்கு, கிழக்கிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது.

### சட்ட விதிகளை மாற்ற முடியுமா?

சட்ட விதிகளை மாற்றும் விடயத்தில் கூட அரசு இரண்டு வழிமுறைகளை நாட முடியும்.

(அ) வடக்கு, கிழக்கு பகுதிகளை ஒதுக்கிவிட்டு அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள எஞ்சிய பகுதிகளில் மட்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிவுகளை அறிவிக்கக் கூடியதாக ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மாற்றுவது.

(ஆ) நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, நாடாளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்தும் வகையில் அரசமைப்பை மாற்றுவதன் மூலம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தவேண்டிய கட்டாய நிலையைத் தவிர்த்தல். ஆனால் இந்த இரண்டையும் ஸ்ரீலங்கா அரசு செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி தேர்தல் சட்டத்தை திருத்த முடியுமா?

ஜனாதிபதித் தேர்தலை எப்படியும் நடத்தி முடிக்க வேண்டியிருப்பதால் அந்த நோக்கத்துக்காக ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டத்தையும் அதனோடு தொடர்பான அரசமைப்புப் பிரிவுகளையும் திருத்துவதற்கு நாடாளுமன்றில் ஆளும் ஐ.தே. கவுக்கு எதிர்க்கட்சியான ஸ்ரீ ல.சு.க. ஆதரவு வழங்கக்கூடும். அதன் மூலம் அத்தகைய சட்ட மூலத்துக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை ஐ.தே.க. பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் அத்தகைய சட்டத் திருத்தம் மக்களின் வாக்குரிமையுடன் சம்பந்தப்பட்டதால் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அனுமதி பெற்றே அத்தகைய திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என உயர் நீதிமன்றம் வலியுறுத்தும் என்று சட்டத்துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

இதனால் தேர்தல் சட்டத்தை திருத்தி தேர்தலை நடத்தி முடிக்கும் முயற்சி பலனளிக்கப் போவதில்லை.

### ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க அரசு முயலுமா?

அடுத்து—

ஜனாதிபதித் தேர்தலை தவிர்ப்பதற்காக நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து — பழைய நாடாளுமன்ற ஆட்சி முறையை அரசு நாடலாம்.

ஆனால் அரச உயர் வட்டாரங்கள் அதற்கு விரும்புவதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை தமது பக்கம் வைத்திருக்கவே ஐ.தே.க. விரும்புகிறது.

தப்பித் தவறி நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க ஆளும் கட்சி விரும்பினால் அத்தகைய முயற்சிக்காக அரசமைப்பை மாற்றுவதற்கு எதிர்க்கட்சிகளும் இணக்கக்கூடும். ஆனால் அதற்கு அரசுக்கு இப்போது போதிய கால அவகாசம் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிக்க இன்னும் ஐந்து மாதங்களே உள்ளன. அதற்கு முன்னர் பலதரப்பு ஆலோசனைகளையும் ஒன்று திரட்டி புதிய நகல் அரசமைப்பை தயாரிப்பது என்பது முடியாத விடயம்.

### அரசுக்கு இருக்கும் ஒரே வழி!

இந்த நிலையில் அரசாங்கத்துக்கு இத்தேர்தலை நடத்தி முடிக்க இருக்கும் ஒரே வழி—

வடக்கு கிழக்கில் தேர்தலை நடத்துவதற்கு புலிகளின் ஒத்துழைப்பைக் கோருவது தான்.

இந்த விடயத்தில்—

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும் — அதாவது சிங்களக் கட்சிகள் — ஒன்றிணைந்து—

தேர்தலை நடத்த ஒத்துழைப்புத் தரும்படி விடுதலைப் புலிகளிடம் கோரினால் —

யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் ஆகியவற்றுக்கு மத்தியில் தேர்தல் செயற்பாடுகள் சுமுகமாக நடைபெற விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு வழங்கக் கூடும் என கொழும்பில் நம்பப்படுகின்றது.

ஆனாலும் தேர்தல் மற்றும் வாக்களிப்புத் தொடர்பான ஏற்பாடுகளுக்கு தமிழீழ காவல்துறையினரே பாதுகாப்பு வழங்குவர் என்பது போன்ற நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் விதிக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

எப்படியென்றாலும்

ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்காக விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பை ஸ்ரீலங்கா அரசு நாடுவது என்பது—

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கில் தனியான ஒரு நாடு உள்ளதையும், விடுதலைப் புலிகளையும் ஸ்ரீலங்கா அரசு அங்கீகரிப்பதாகவே இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

### கொழும்பு பத்திரிகையாளரின் பதில்

"நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் குறித்தும், தேர்தல் பிரசாரங்கள் குறித்தும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றியும், அவர்கள் முன்வைக்கும் பிரச்சினைகள் குறித்தும் கொழும்புப் பத்திரிகைகளும், தொலைத் தொடர்புச் சாதனங்களும் போட்டி போட்டுக் கொண்டு செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால் அடுத்த ஐந்து மாதங்களுக்குள் இத்தேர்தலை நடத்த முடியுமா என்பது பெரும் சந்தேகமாக இருப்பது குறித்து அவை அதிகம் அலட்டிக் கொள்ளாமலும், மூச்சுவிடாமலும் அது பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமலும் இருக்கின்றன. இது ஏன்?" என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

"எப்படியும் — ஏதேனும் ஒரு வகையில் — தேர்தலை நடத்த அரசு ஏற்பாடு செய்து விடும் என எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். அனேகமாக இந்த விடயத்தில் அது விடுதலைப் புலிகளுடன் ஓர் இணக்கத்துக்கு வருவதாகத்தான் இருக்கும்" — என்றார். (உ)

## பிரபாவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரிவித்த அவர்—

அப்போது முதற்கட்ட பேச்சுகளின் போது பரிமாறப்பட்ட கருத்துகள் பற்றிய திரு பிரபாகரனின் அபிப்பிராயங்களைத் தாம் அறிந்து கொள்ள இயலும் என்றும் குறிப்பிட்டார். [illegible] சமாதான முயற்சி வெற்றியளிக்கும் என்று தாம் பெரிதும் நம்புவதாகவும் அவர் கூறினார்:

வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தீர்வு காணுவதற்கு விடுதலைப் புலிகளுடன்பேச்சு நடத்தத் தாம் எடுத்து வரும் முயற்சிக்கு அரசின் கவனமும் செலுத்தப்பட்டிருப்பதாக திரு. பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

(இ-ஏ-6)

இப்பத்திரிகை [illegible] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் [illegible] பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org